வாடிக்கையாளர்கள்,
நண்பர்கள்,
அன்பர்கள்
அனைவருக்கும் எமது
தீபாவளி
வாழ்த்துக்கள்
சிக்கோடிரேடர்ஸ்
43, நவீனசந்தை,
யாழ்ப்பாணம்.

பக்கங்கள் 12

# ஈழநாடு
The Eelanaadu

60 சதம்

மலர் 22 ஐப்பசி 21 ... 27 இதழ் 268
யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 6-11-80

UNIVERSITY OF SRI LANKA - JAFFNA
RECEIVED
1980-11-7
PERIODICALS DIVISION
LIBRARY

வாடிக்கையாளர்கள்,
நண்பர்கள்,
அன்பர்கள்
அனைவருக்கும்
இனிய தீபாவளி
வாழ்த்துக்கள்
பல்க்கன்
ஏஜென்சி
இந்துசாதி,
யாழ்ப்பாணம்.
போன்: 6

# சாராயம், சிகரட் விலை உயர்வு!

# ஜனவரி முதல் ரூ 70 விசேடபடி!!

## அமைச்சுக்களின் செலவில் ரூபா 270 கோடி குறைப்பு

### நிதி அமைச்சரின் பட்ஜட் யோசனைகள்

(கொழும்பு)

1981ம் ஆண்டுக்கான வரவுசெலவு திட்ட உரையை நேற்று பாராளுமன்றத்தில் நிகழ்த்திய நிதி, திட்டமிடல் அமைச்சர் திரு. ரொனி டி மெல்; துண்டுவிழும் தொகையான 1600 கோடி ரூபாவையும், வெளிநாட்டு, உள்நாட்டு கடன் மூலமாகவும்; உள்ளூர் வரி அதிகரிப்பு மூலமாகவும்; அமைச்சுக்களின் செலவுகளைக் கட்டுப்படுத்துவதன் மூலமும் சமாளிக்கும் யோசனைகளை வெளியிட்டார்.



நிதி, திட்டமிடல் அமைச்சர் தமது பட்ஜட் உரையில்; அரச ஊழியர்களுக்கும் அரசாங்க ஓய்வூதியம் பெறுவோருக்கும் அடுத்த வருடம் ஜனவரி மாதம் முதல் எழுபது ரூபா மேலதிக அலவன்ஸ் வழங்கப்படும் என்று அறிவித்தார். இந்த அலவன்ஸ் உயர்வை தனியார் துறையினரும் வழங்குவார்கள் என்று தாம் எதிர்பார்ப்பதாகவும் நிதி அமைச்சர் நம்பிக்கை தெரிவித்தார்.

### விலை அதிகரிப்பு

நிதியமைச்சரின் பட்ஜட் யோசனைகளுக்கிணங்க சகல ரக சிகரெட்டுக்கள் விலையிலும் மூன்றுசதம் அதிகரிக்கப்பட்டுள்ளது. மதுபானங்களைப் பொறுத்தவரை விசேஷ சாராயம் போத்தல் ஒன்று இருபத்தெட்டு ரூபாவாகவும், தென்னஞ் சாராயம் போத்தல் ஒன்று முப்பத்துநான்கு ரூபாவாகவும் அதிகரிக்கப்பட்டுள்ளது. இதனுடன் சகல வெளிநாட்டு மதுபானங்களினது விலைகளும் அதிகரிக்கப்பட்டுள்ளது. இந்த விலை அதிகரிப்பு உடனடியாக அமுலுக்கு வருகிறது என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

மதுபான விலை அதிகரிப்பின் மூலம் அரசுக்கு எட்டுக்கோடி ஐம்பது லட்ச ரூபா வருமானம் கிடைக்கிறதென்றும்; சிகரெட் விலை அதிகரிப்பின்மூலம் அரசுக்கு பதினொரு கோடி ரூபா வருமானம் கிடைக்கிற...

(12-ம் பக்கம் பார்க்க)

### தீபாவளி வாழ்த்து

வாசகர்கள், விளம்பரதாரர்கள், விற்பனையாளர்கள் அனைவருக்கும் "ஈழநாடு" தனது இதயங்கனிந்த தீபாவளி வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறது.

## 'யானைப்பசிக்குசோளப்பொரி'

### 70 ரூபா சம்பளஉயர்வுபற்றி 'அமிர்' கருத்து

(கொழும்பு)

நிதியமைச்சரின் பட்ஜட் யோசனைகள் பற்றி எதிர்க்கட்சித்தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் நேற்றுக் கருத்துத் தெரிவிக்கையில்; பட்ஜட் யோசனைகள்— பின்னோக்கிச் செல்கின்றன என்றார்.

எழுபது ரூபா சம்பளஉயர்வு பற்றி அவரிடம் கேட்டபோது "இது யானைப்பசிக்கு சோளப்பொரிபோட்டதுபோல இருக்கிறது" என்று திரு. அமிர்தலிங்கம் ஆச்சரியம் தெரித்தார்.

## யாழ். அரச அதிபர் தீபாவளிச் செய்தி

(யாழ்ப்பாணம்)

"தீமைகள் அழிக்கப்பட்டு நன்மைகள் நிலைநாட்டப்பட்டதற்கு அடையாளமாகவே காலங்காலமாகத் தீபாவளித் திருநாளைக் கொண்டாடி வருகின்றோம். இத்திருநாள் இதன் காரணமாக வ... ஒளித்திருநாளாக ஒப்பற்ற முறையில்

(12-ம் பக்கம் பார்க்க)

## 'அமிர்' தீபாவளி வாழ்த்து!

(கொழும்பு)

அதர்மம் அழிந்து தர்மம் வெற்றிபெற்றதைக் கொண்டாடும் தினமே தீபாவளியாகும். அநீதிகளை எதிர்த்து ஒழிக்க இன்றைய தினம் உறுதிபூணுவது சாலவும் பொருத்தமாகும்.

இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் தீபாவளித் திருநாளை முன்னிட்டு வெளியிட்டுள்ள செய்தியில் தெரிவித்துள்ளார். அவர் அச்செய்தியில் மேலும் தெரிவித்துள்ளதா...

(12-ம் பக்கம் பார்க்க)

# ரீகன் பெருவெற்றி

(வாஷிங்டன்)

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில், திரு. றொனால்ட் ரீகன் அமோக வெற்றி பெற்றுள்ளார்.

மாநில ரீதியான தேர்தல் தொகுதி வாக்குகளைப் பொறுத்தவரை திரு ரீகனுக்கு இதுவரை 450 வாக்குகளும் திரு கார்ட்டருக்கு 49 வாக்குகளும் கிடைத்துள்ளன. ஜனாதிபதி ஒருவர் தெரிவுசெய்யப்பட 270 தேர்தல் தொகுதி வாக்குகள் கிடைத்தால் போதுமானது என்பது குறிப்பிடத்தக்கது.

அமெரிக்காவின் 40 - வது ஜனாதிபதியாக குடியரசுக் கட்சி வேட்பாளர் திரு. றொனால்ட் ரீகன் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இவர் 270 தொகுதிகளில் வெற்றிபெற்று 50 சதவிகிதமான வாக்குகளை மொத்தம் 1 கோடியே 97 லட்சத்து 10,000 வாக்குகளைப் பெற்றுள்ளார்.

இவருடன் போட்டியிட்ட அமெரிக்காவின் தற்போதைய ஜனாதிபதியான ஜனநாயகக் கட்சி... கார்ட்டர் 1 கோடியே 67 லட்சத்து 10... வாக்குகளைப் பெற்றுள்ளார். இவர் 43 சதவிகிதமான வாக்குகளைப் பெற்றார்.



சுயேச்சை வேட்பாளரான திரு. ஜோன் அன்டர்ஸன் 22 லட்சத்து 30,000 வாக்குகளைப் பெற்றார். இவருக்கு 6 சதவிகிதமான வாக்குகளே கிடைத்தன.

அமெரிக்காவில் 1888-ம் ஆண்டின் பின்னர் குடியரசுக் கட்சி வேட்பாளரொருவர் ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டது இதுவே முதல் தடவை எனக்கூறப்படுகின்றது.

திரு. றொனால்ட் ரீகன்

(12-ம் பக்கம் பார்க்க

## மக்கள் தீர்ப்புக்கு சிரம்தாழ்த்துகிறார் கார்ட்டர்



வாஷிங்டன் நவ. 5

"அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் குடியரசுக் கட்சி வேட்பாளர் திரு. றொனல்ட் ரீகன் வெற்றி பெற்றதை சிரம்தாழ்த்தி வரவேற்கின்றேன். அவருக்கு எனது பாராட்டையும் தெரிவித்துள்ளேன்"

இவ்வாறு அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் ஜனநாயகக் கட்சி வேட்பாளராகப் போட்டியிட்ட...

(12-ம் பக்கம் பார்க்க)

## "தொல்லைகளைக்கண்டு அஞ்சமாட்டேன்!"

### புதிய ஜனாதிபதி ரீகன் சூளுரை

வாஷிங்டன், நவ. 5

"எனக்கும் எனது கட்சிக்கும் பெற்றுக் கொடுத்த வெற்றிக்காக அமெரிக்க மக்களுக்கு நன்றி தெரிவிக்கின்றேன். தற்போது நான் தாய்நாட்டின் முன்னேற்றத்திற்காக உழைக்கவேண்டிய பொறுப்பை ஏற்றுள்

(12-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முதலாவது ஆண்டு நினைவாஞ்சலி

தோற்றம்: 13-12-1957 மறைவு: 6-11-79

இன்று கச்சாய் வீதி சாவகச்சேரியைச் சேர்ந்த

கஸ்பார் அந்தோனிப்பிள்ளை அவர்களின்

முதலாவது ஆண்டு நினைவு தினம்

7279

## I நிர்வாகத் தட்டெழுத்து, சுருக்கெழுத்தாளர்

ஆங்கிலத்தில தேர்ச்சி பெற்ற அனுபவம் வாய்ந்த தட்டெழுத்து/சுருக்கெழுத்தாளர் தேவை. நிர்வாக அலுவல்களைச் சுயமாகவே கவனிக்கும் திறனும் காரியாலயத்திற்கு அண்மையில் தங்கியிருக்கக்கூடிய வசதியுள்ளவர்களாகவும் இருக்கவேண்டும். சம்பளம் 600/- தொடங்கித் தேர்ச்சியின் அடிப்படையில் உயர்ச்சி நிர்ணயிக்கப்படலாம். ஓய்வு பெற்றவர்களுட்பட இரு பாலாரும் விண்ணப்பிக்கலாம்.

## II இசைக்கலைஞர்கள்

கிராமியக்கலை நிகழ்ச்சிகளில் பங்கு பற்றப் பல வித இசைக்கருவிகளை இயக்கக்கூடியவர்களும் அனுபவம் வாய்ந்த இசையமைப்பாளர்களும் தேவை. நேரில் தொடர்பு கொள்ளவும்.

## III மருத்துவர்கள்

இகிமிநி நடமாடும் வைத்தியசாலை

(S S R R Mobile Rural Clinic Project)

மேற்படி நிறுவனத்தால் இம்மாதம் ஆரம்பிக்கப்படும் நடமாடும் வைத்தியசாலைக்கு எமது அலுவலர்களுடனும் மருத்துவர்களுடனும் யாழ்ப்பாணத்திலிருந்து 30 மைல்களுக்குட்பட்ட தேர்ந்தெடுக்கப்பட்ட கிராமங்களில்கடமைபுரிய சேவமனங்கொண்ட மருத்துவர்களை அழைக்கின்றோம். குறைந்தபட்சம் மாதத்தில் ஒருமுறையாவது கிராமங்களில் சென்று நற்பணியில் ஈடுபட முன்வருபவர்களுக்கு போக்குவரத்து உணவு வசதிகளும் நேரச்சிரமத்திற்கான படிகளும் வழங்கப்படும். மேலும் விபரம் அறிய விரும்பின காரியாலயத்திற்கு விண்ணப்பித்தால் நிறுவனம் மருத்துவப் பகுதிப் பிரதிநிதிகள் தங்களைச் சந்திக்க ஏற்பாடு செய்து கொடுக்கப்படும்.

## IV வான் சாரதி

அனுபவம் வாய்ந்த வான் சாரதி தக்க சான்றிதழ்களுடனும் நற்சாட்சிப் பத்திரங்களுடனும் உடனடியாகத் தேவை. கீழ்க்கண்ட விலாசத்திற்கு விண்ணப்பிக்கவும்.

அலுவலகத்தில் நேரில் தொடர்பு கொள்வது விரும்பத்தக்கது

### இலங்கை கிராமிய மீளமைப்பு நிறுவனம்,

இல. 70, புங்கன்குளம் வீதி,

கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்.

7272

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

கச்சேரிக்கு அருகாமையில் உள்ள காட்டுக்கந்தோர்ரோட்டில் 2பரப்பு வீடுகட்டக்கூடிய காணி உடனடியாக விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ளும் விலாசம்: யோசப் வில்மட், பொற்பதிவீதி, கொச்சுவில் கிழக்கு. 7271

நல்ல நிலையில் உள்ள சிங்கர் வோக் (Singer Vouge) கார் விற்பனைக்கு உண்டு. 4சிறி 8347 கீழ்க்காணும் முகவரிக்கு தொடர்பு கொள்ளவும். சி. ஸ்கந்தமயம், ரூம்ரூஜ், சித்தங்கேணி. 7250

யாழ். புதிய சோனக தெருவில் சகல வசதிகளுடன் கல்வீடு வளவு விற்பனைக்குண்டு. விபரங்கட்கு: அ. நவமணி, 617, ஓட்டுமடம் சந்தி, யாழ்ப்பாணம். 7262

## அஹிம்சை

பெயர், புகழ், பணம் என்னும் ஆசைகளைத் துறந்தவனே அஹிம்சையைப் பயிலுதற்குரியான்.

— சுவாமி சிவானந்தர்

## பதவி வெற்றிடம்

### புலோலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்

மேற்படி சங்க மருந்தகச் சாலைக்கு மருந்தாளர் பதவிக்கு (பாமசிஸ்ற்) தராதரப்பத்திரமுள்ள இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விபரங்களுக்கும், விண்ணப்பப்பத்திரத்திற்கும் தொடர்புகொள்ள வேண்டிய முகவரி தலைவர், புலோலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், புலோலி.

முடிவுத்திகதி: 21-11-1980.

தலைவர்.

புலோலி பலநோக்குக் கூட்டுறவுச்சங்கம்,

புலோலி.

1980-10-30. 7257

## மீனவ நண்பர்களுக்கு ஓர் நற்செய்தி!

நநவம் அன் கொம்பனி லிமிட்டெட்

ஸ்தாபனத்தார் இறக்குமதி செய்யும் தரத்திற் சிறந்த (Memoi) மெமோய்

- ஜப்பானிய மீன்பிடி வலைகள்
- பொலித்தீன் கம்பாகங்கள்
- குறுலோன் நூல்கள், மிதப்புகள்
- கொம்பாஸ்கள்

மற்றும் சகல வித மீன்பிடி உபகரணங்களையும்

அதே மலிவு விலையில் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.

உங்கள் தேவைகட்கு எம்மை நாடுங்கள்

### சிவகாந்தா ஸ்ரோர்ஸ்,

65, 66, நவீனசந்தை (உட்புறம்)

யாழ்ப்பாணம்.

7276

## தீபாவளி வணக்கம்

மாயனை வணங்குதல் தீபாவளி என்பர்

பவனை வணங்குதல் பக்தி நெறி என்பர்

எவனும் அணுகிடா இன்ப மகிழ்விலே

இணைய வணங்குதல் பேரின்பம் பணிவரால்

தரணி மீதிலே தாயைத் துதிப்பரால்

இரணி ஈவானோ!

எமக்கு இன்பமே.

— எஸ். கே. சாமி

மு. சபாநாதன்

சட்டத்தரணியும்

நொத்தாரிசும்

வட்டுக்கோட்டை.

## பின்னுறுதிக்கட்டளை பற்றிய அறிவித்தல

மல்லாகம்

மாவட்ட நீதிமன்றத்தில்

மூளாயைச் சேர்ந்த காலஞ்சென்ற குமாரசாமி ஐயர் பாலசுப்பிரமணியக் குருக்கள் என்பவரின் மரணசாதனத்தின் / மரணசாதனமில்லாச் சொத்தின் விடயத்தில்,

மரணசாதனத்தியவர்

பாலசுப்பிரமணியக்குருக்கள் கைம்பெண் சாரதாம்பாள், மூளாய்

மனுதார்.

மரணசாதன ]
நியாயாதிக்கம்] இல.58

மேலேயுள்ள இலக்கங் கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்துபோனவரின் மரணச்சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு, அதில் அதற்கிணங்கப் பின்னுறதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும், 1980 ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் 14 ஆந் நாளன்று முற்பகல் 9 மணிக்கு இந்நீதிமன்றத்தின்முன்னர் தோன்றி, அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாதென்பதற்குக் காரணங்காட்டுமாறு, இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றார்.

நீதிமன்றக்கட்டளைப்படி

ஒப்பம்

மு. நல்லலிங்கம்

பதிவாளர்

1980 ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 3 ஆந்நாளாகிய இன்று தேதியிடப்பட்டது. 7254

நல்லெண்ணை ராஜா தனது வாடிக்கையாளர்களுக்கும், அபிமானிகளுக்கும் அன்புகலந்த தீபாவளி வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறார்

# நல்லெண்ணை ராஜா

என்றதும், யாழ்.நகரில் நம்பிக்கைக்கு உத்தரவாதமுள்ள நல்லெண்ணை வியாபாரத்தில் புகழ்பெற்ற

பரிமளா ஸ்ரோர்ஸ் ஸ்தாபனமே நினைவுக்குவரும்.

உங்கள் சாப்பாட்டுக்கு

## V. S. P. ஸ்பெஷல் லஞ்ச் ஒயில்

(சாப்பாட்டு நல்லெண்ணை)

ஏக விநியோகஸ்தர்கள்:

## பரிமளா ஸ்ரோர்ஸ்

26A, மானிப்பாய் வீதி,

யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 7224

நாயன்மார்கட்டு சனசமூகநிலையம்

## முக்கிய அறிவித்தல்

6-11-80 வியாழக்கிழமை அன்று அதிர்ஷ்டம் பார்க்கப்படவிருந்த அதிர்ஷ்டலாபச் சீட்டு மூப்பு14-1-81செவ்வாய்க்கிழமை (தைப்பொங்கல்) அன்றுவரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது என்பதை இத்தால் சகலருக்கும் அறியத்தருகிறோம்.

இப்படிக்கு

பூ. லிங்கேஸ்வரன்,

நிலையச்செயலாளர்.

7280

எட்டுத்திசையும் ஒளிபரப்பும் தீபாவளித் திருநாளில் அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் இதயம்கனிந்த தீபாவளி வாழ்த்துக்கள்.

- எல்லோர் மனதிலும் சைவ உணவுவகைகளுக்கு பெயர்பெற்றது ''அசோக் பவான்'' என்றதே பேச்சு...
- சுவையான அறுசுவை உணவுக்கும், குளிர்பானங்கள், வெளிநாட்டு பிஸ்கட்டு, இனிப்புவகைகள் அனைத்துக்கும் அசோக் பவான்.
- தென்றலிலும் இனிய கீதங்களை கேட்டு, குளிரூட்டப்பட்ட, ''வாசன்ஸ் சுப்பர் ரவல்ஸ்'' சேவையை யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்கு நடத்துபவர்.

# அசோக் பவான்

112, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். போன்: 8095

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனைவருக்கும் அன்புகலந்த
**தீபாவளி வாழ்த்துக்கள்**
நவநாகரீக நகைகளுக்கு
சிறந்த ஸ்தாபனம்
**ஹரன்**
ஜுவல்லர்ஸ்
50, கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.
போன்: 441 தந்தி: இரத்தினம்ஸ்

அனைவருக்கும் இதயங்கனிந்த தீபாவளி வாழ்த்துக்கள்
**வசந்தா வஸ்திராலயம்**
இல. 20, மேல்மாடி மக்கள் நவீனசந்தை
யாழ்ப்பாணம்.
- சாறிகள் மற்றும் ... அழகிய டிசைன்களில் விரும்பிய வண்ண நிறங்களில் பிறின்றிங் செய்துகொடுக்கப்படும்.
- பாடசாலை மாணவிகளுக்கு வேண்டிய சீருடைகள்
- மகளிர்களுக்கு வேண்டிய சகல உடுப்புவகைகள் ஓடருக்குத் தைத்துக் கொடுக்கப்படும்.
- கோவில்கள், உங்கள் பூசை அறைகளுக்கு வேண்டிய திரைச்சேலைகள், ... வரைந்து ஓடருக்குச் செய்துகொடுக்கப்படும்.
இவைகளின் ஓடர்கள் ... ஸ்தாபனத்திலும் ஏற்றுக்கொள்ளப்படும்.
**வசந்தா ரெக்ஸ்ரயில்ஸ்**
42, கல்லூரி வீதி, நீராவியடி
யாழ்ப்பாணம்.

# அமெரிக்க ஜனாதிபதி தேர்தல் றீகன் முன்னணியில்

ஹைதரவாத், நவ.5
அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் இதுவரை அளிக்கப்பட்ட வாக்குகளின்படி குடியரசுக்கட்சி வேட்பாளர் திரு. றொனல்ட றீகன் முன்னணியில் நிற்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுவரை எண்ணப்பட்ட வாக்குகளின்படி திரு. றொனல்ட் றீகனுக்கு 55 சதவிகிதவாக்குகளும் ஜனநாயக்கட்சி வேட்பாளர் திரு. ஜிம்மி கார்ட்டருக்கு 45 சதவிகித வாக்குகளும் சுயேட்சை சவட்பாளர் திரு ஜோன்அன்டர்ஸனிற்கு 10 சதவிகித வாக்குகளும் கிடைத்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

குடியரசுக்கட்சி வேட்பாளர் திரு. றொனல்ட் றீகனுக்கு நடுத்தர வயதினர் மத்தியிலும் வயதுவந்தவர்கள் மத்தியிலும் பெருமளவு ஆதரவு இருந்து வருவதாகக் கூறப்படுகிறது.

முன்பு நடைபெற்ற அமெரிக்க ஜனாதிபதி தேர்தல்களில் ஜனநாயக்கட்சி வேட்பாளருக்கே முதலில் அதிக வாக்குகள் பதிவு செய்யப்பட்டதாக அமெரிக்க செய்தி ஏஜன்ஸியொன்று தெரிவித்துள்ளது. ஆனால் இம்முறை குடியரசுக் கட்சி வேட்பாளருக்கே முதலில் அதிக வாக்குகள் பதிவு செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அமெரிக்காவின் 40-வது ஜனாதிபதியைத் தெரிவுசெய்யும் வாக்களிப்பில் அமெரிக்க மக்கள் பெருமளவில் உற்சாகமாகக் கலந்து கொண்டதாக அறிவிக்கப்பட்டது. (வெ)

அமெ. பணயக் கைதிகள் விவகாரம்:

## ஈரானின்நான்குநிபந்தனைகள்குறித்து அமெரிக்கா அறிக்கை வெளியிடாது!

வாஷிங்டன், நவ.5
ஈரானில் பணயம் வைக்கப்பட்டுள்ள 52 அமெரிக்க பணயக் கைதிகளையும் விடுதலை செய்வது குறித்து ஈரானிய அரசாங்கம் விடுத்துள்ள நான்கு நிபந்தனைகள் தொடர்பாக தற்போது அமெரிக்கா பகிரங்க அறிக்கை எதனையும் வெளியிடமாட்டாதென்று அமெரிக்க அரசாங்க உயரதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

ஷாவின் சொத்துக்களை திருப்பித் தரவேண்டும்.

பொருளாதாரத்தடையை நீக்கவேண்டும்.

அமெரிக்காவில் தடுத்து வைக்கப்பட்டுள்ள ஈரானியச் சொத்துக்களை திருப்பித்தர வேண்டும்.

ஈரானின் உள்விவகாரங்களில் அமெரிக்கா தலையிடக் கூடாது. ஆகிய நான்கு நிபந்தனைகளும் ஈரானிய அரசாங்கத்தினால் வெளியிடப்பட்டது தெரிந்ததே.

இந்நிபந்தனைகளில் மூன்றை எந்தவொரு அமெரிக்க ஜனாதிபதியுமே ஏற்றுக்கொள்ளமாட்டாரென்று அவ்வதிகாரி மேலும் தெரிவித்தார். (வெ)

வாடிக்கையாளர்களுக்கும், ஆதரவாளர்களுக்கும் லலிதாவின்
**தீபாவளி வாழ்த்துக்கள்** உரித்தாகுக!
வண்ண டிசைன்களில் வைர--தங்க நகைகளுக்கு
வனிதையரே வாருங்கள்!
**லலிதா மாளிகை**
உரிமையாளர்: செல்லையா இந்திரசித்து
நம்பிக்கைக்கு உத்தரவாதமுள்ள நகை வியாபாரிகள்
நவீன டிசைனுக்கும் சிறந்த வேலைப்பாட்டுக்கும் பெயர்பெற்ற ஸ்தாபனம்
**லலிதா ஜுவல்லறி**
213,133, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
போன்: 7205

## அசாம் பிரச்னை

கௌகாத்தி, நவ5.
அரசியல்சாசன வரம்புக்குள் நின்று அசாம் பிரச்னையைத் தீர்க்க முடியுமென்று மத்திய உள்துறையமைச்சர் திரு. ஸயில்சிங் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

## கௌரி விரத லட்சார்ச்சனை

(யாழ்ப்பாணம்)
கீரிமலை நகுலேஸ்வர ஆலயத்தில் கேதார கௌரி விரத லட்சார்ச்சனை சங்காபிஷேகயாக பூசை இன்று பிற்பகல் நடைபெறும்.

அனைவர்க்கும் இதயம் கலந்த தீபாவளி வாழ்த்துக்கள்!
கண்ணுக்கினிய நகைகளுக்கு ஜப்பான் ஜுவலர்ஸ்
கருத்தைக் கவரும் நகைகளுக்கு ஜப்பான் ஜுவலர்ஸ்
மாற்றுக் குறையாத நகைகளுக்கு ஜப்பான் ஜுவலர்ஸ்
ஞாபகத்தில் என்றும் வைத்திருங்கள்
**ஜப்பான் ஜுவலர்ஸ்**
64, கன்னாதிட்டி றோட், போன்: 518 யாழ்ப்பாணம்.

வாடிக்கையாளர்கள் அனைவருக்கும்
எமது தீபாவளி நல் வாழ்த்துக்கள்
எம்மிடம் றீகொண்டிசன் செய்யப்பட்ட
**ஹொண்ட மோட்டார் சைக்கிள்கள்**
உதிரிப்பாகங்கள் ஆகியன
நிதான விலையில் பெற்றுக்கொள்ளலாம்.
**காந்தா மோட்டோர்ஸ்**
ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 8-40

தீபத்திருநாளாகிய தீபாவளித் திருநாளில் சகலரது வாழ்விலும் ஒளி பிறக்கட்டும். அன்பர்கள், ஆதரவாளர்கள், நண்பர்கள் அனைவருக்கும் இதயம் கலந்த தீபாவளி வாழ்த்துக்கள். . . . . சுவையான உணவு வகைகளுக்கும், அன்பான உபசரிப்புக்கும், குளிர்பானங்கள், வெளிநாட்டு பிஸ்கட், இனிப்பு வகைகளுக்கும் பெயர்பெற்ற ஸ்தாபனம். யாழ். மாநகரசபையின் பரிசுபெற்றது.
**குட்லக் ஹொட்டல்**
458, ஆஸ்பத்திரிவீதி,
யாழ்ப்பாணம். Hello: 7386

இறை அருளும், வளரும் வாழ்வும் சிறக்க, எங்களது இனிய தீபாவளி வாழ்த்துக்கள் . . .
- சங்கரப்பாணம் பார்டர் சிங்காரச் சேலைகள்
- திருமணப் பிடவைகள்
- கண்டிகைப் பட்டுக்கள்
- கைத்தறிப் பிடவைகள் அனைத்துக்கும். . . .
**கல்பனாஸ் ரெக்ஸ்ரைல்ஸ்**
70, நவீனசந்தை, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

அயராத உழைப்பும், தன்னம்பிக்கையும், விடாமுயற்சியுமேவாழ்க்கையைப் பயனுள்ளதாகவும் புகழ்நிறைந்ததாகவும் மிளிரச்செய்பவை என்பது மிகையாகாது

—ஹாமில்டன்.

### அறிவித்தல்

தீபாவளி தினத்தை ஒட்டி (6-11-80) இன்று வியாழக்கிழமை 'ஈழநாடு' காரியாலயத்துக்கு விடுமுறை ஆதலால், நாளை 7-ம்திகதி வெள்ளிக்கிழமைமட்டும் 'ஈழநாடு' வெளிவராது என்பதை வாசகர்களுக்கும், விளம்பரதாரர்களுக்கும் அறியத்தருகின்றோம்.

(ஆ-ர்)

## நமது நோக்கு

### பொலிசாரைப் பாராட்டுகிறோம்

கடந்த சில மாதங்களாக வவுனியா — ஹொரவப்பொத்தானை வீதியில் நடைபெறுவந்த பயங்கரக்கொள்ளைகள் பிரயாணிகளுக்குப் பெரும் பீதியை ஏற்படுத்திவந்தன.

இதற்கு முடிவு வராதா என்று ஏங்கிநின்ற எல்லோருக்கும் ஒரு விடிவுகாலம் வந்திருக்கின்றது. மக்கள் காவலராகிய பொலிஸாரின் வீரசாதனையே இதற்கு முற்றுப்புள்ளி வைக்கும் நிலையை ஆக்கி உள்ளது.

பல வழிப்பறிகளில் உருசிகண்ட கொள்ளைக் கோஷ்டியினர் கடந்த ஞாயிறு நள்ளிரவில் இன்னொரு கொள்ளைக்குத் தயாராகும் நேரத்தில் கையும்மெய்யுமாக வவுனியாப் பொலிஸ் கோஷ்டியினர் கையில் சிக்கினர்.

கொள்ளையர் கோஷ்டியினரைப் பொலிஸ் கோஷ்டியினர் முறியடித்த வீரச்செயல் நாட்டு மக்கள் அனைவரின் பாராட்டுக்குரியது. நாட்டில் பல பகுதிகளில் கொள்ளை வழிப்பறி மீண்டும் தலைதூக்கி வருவதாக அறிகிறோம். ஆயினும் திட்டமிட்ட பயங்கரக் கொள்ளைகள் பொலிஸாரின் திறமையாலும் துணிவாலும் நேரடியாக முறியடிக்கப்பட்ட செய்திகள் அரிதினும் அரிது

கொள்ளை மட்டுமா? கொலைக்கும் உட் சாத்தியமான சின்னங்களைப் பொலிஸார் கைப்பற்றினர். சுழல் துப்பாக்கிகள் கைபிள்கள், வாள், கத்தி, முகமூடிகள் ஆகிய உபகரணங்கள் கொண்ட கோஷ்டி என்றால் அவர்களின் திட்டம் எத்தகையதென்று விபரிக்கவும் வேண்டுமா?

பொலிஸார் நடத்திய வேட்டை மிக இலகுவானதாகத் தெரியவில்லை. தப்பியோட முயன்ற காடையர்களை மடக்கிப் பிடித்த வரலாறு மிகச்சாதுரியமானது.

நெடுந்தூரப்பயணம் இன்றைய கட்டத்தில் பொது மக்களின் பணவசதிக்கு ஒட்டாத காரியம். எனவே பஸ் வண்டிகள், லொறிகள் தூரங்குறைந்த குறுக்குப் பாதைகளை நாட வேண்டியதிர்ப்பந்தத்துக்குள்ளாகின்றன.

குறிப்பிட்ட குறுக்குப் பாதையில் ஒருபகுதி, மக்கள் நடமாட்டம் குறைந்த காட்டுப்பாதையாகும். வழிப்பறிக்கு உகந்த இடம் இது, நாட்டில் வேறு பல இடங்களும் இவ்விதம் இருண்ட நிலையில் உள்ளன. திறமையும் அனுபவமும் வாய்ந்த சாரதிகளே இவ்விடங்களில் துணிந்து வாகனங்களைச் செலுத்த முன் வருகின்றனர். இவர்களிற் சிலர் இவ்வித கோஷ்டியினரிடம் சிக்கிக் காயப்படுவதுமல்லாமல் உயிரிழக்கும் அபாயத்துக்கும் ஆளாவர்.

இந்த அபாய நிலையங்களைத் தீவிர பாதுகாப்பில் கொண்டு வருவது அவசியம். எந்தப் பயங்கர நிலையிலும் மக்கள் பயணஞ் செல்ல வேண்டிய அவசியம் அதிகரித்து வருகிறது. காசோ, காசோலையோ, கைக்கடிகாரமோ இவை போன்று அத்தியாவசியமான பொருட்கள் இல்லாமல் எவரும் பயணஞ் செய்வதில்லை.

வழிப்பறிகளில் இவற்றை இழந்து காயப்பட்டு, உயிர் இழக்க வேண்டிய நெருக்கடியில் எங்கள் மக்கள் பொலிஸாரைத் திட்டவே பயிற்சி பெற்றிருக்கின்றனர்.

இந்த அடிப்படையில் கடந்த பல வருடங்களில் இடம்பெற்ற துன்பச் சம்பவங்களால் விரக்தியும், ஏமாற்றமும் அடைந்த மக்கள் இன்று பொலிஸாரின் வீரச்செயலை மனமாரப் போற்றி அச் சேவைக்குரிய பெருமதிப்பை வழங்க முன் வரவேண்டும்.

நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடியில், உழைக்கத் தயங்கும் காடையர் கூட்டம் இவ்வித வழிப்பறிகளை நம்பியே வாழ முயலும். பொலிஸாரே இவர்களிடமிருந்து எம்மைக் காக்கும் கடவுள்கள்.

இம்மாபெருஞ் சாதனைக்கு வழி வகுத்துவரும் பிரதி பொலிஸ் மா அதிபர் விசேட ஒருங்கிணைப்புப் பகுதி-வடபிராந்திய பிரதி பொலிஸ் மா அதிபர், வவுனியா பொலிஸ் அதிபர், வவுனியா தலைமைக்காரியாலய இன்ஸ்பெக்டர்கள் தலைமையில் செயற்பட்ட வெற்றிக் குழுவினர் அனைவருக்கும் எங்கள் மனமார்ந்த பாராட்டு.

## "சுதந்திரத் தமிழ் ஈழம் மலர பாடுபடவேண்டும்"

### யாழ். மேயரின் தீபாவளிச் செய்தி

(யாழ்ப்பாணம்)

''மலரவிருக்கும் சுதந்திரத் தமிழ் ஈழத்தின் சமூக சமுதாய சமநீதி தனித்தோங்க இப்பொழுதிருந்தே தமிழ் மக்கள் பாடுபட வேண்டும். அதற்கு தம்மை பக்குவப்படுத்திக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்''

தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டு யாழ். முதல்வர் திரு. இராஜா விஸ்வநாதன் வெளியிட்ட அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டதாவது

தமிழ் ஈழத்தின் தலைகண்டு குமுறும் தமிழ் நெஞ்சங்களுக்கு தலைவென்று தலை நிமிர விடுதலைவாழ்வுபெறு வீரென்று அநீதியை ஒழித்து அறம்காத்த இத் தீபாவளிப் பெருநாளில் இதயபூர்வமாக வாழ்த்துகிறேன்.

அன்புமனம் அள்ளி வீசும் ஆசையலைகள் ஆடிவரத் தமிழ் மக்கள் அனுபவிக்கும் துன்பமெல்லாம் பறந்தோட துயர நிலை அகல இத் தீபாவளிப் பெருநாளில் அநீதிக்கு அடிமைத்தலைக்கு தமிழ் ஈழம் அடிபணிவதில்லை என்று உறுதியெடுத்துக் கொண்டு அநீதியை ஒழித்துத் தாயகத்தை மீட்கும் பணிக்கு எம்மை மீண்டும் அர்ப்பணித்துக் கொள்குவோம்.

சமூக சகோதரத்துவத்தைப் போற்றிடுவதற்காகவும், பொருளாதார சமத்துவத்தைப் பெற்றிடுவதற்காகவும் தமிழீழத் தாயகத்தின் கைவிலங்கை அறுத்திடுவதற்காகவும் ஒதிர்வரும் தீபாவளிப் பண்டிகையை நாம் சிறப்பாகக் கொண்டாடுவோம்.

அநீதி ஒழிக்கப்பட்டு அறம் காக்கப்பட்ட இப் பொன்னாளில் துன்பப்படுபவர்களுக்காகத் துயரப்படுபவர்களுக்காகப் பச்சாதாபப்படுவோம் அநீதி எங்கிருந்து வந்தாலும் அநீதி எந்த உருவெடுத்து வரினும் யாரெவருக்கு அநீதி இழைக்கப்பட்டாலும் அநீதியோடு போரிட்டு நீதியை நிலைநாட்டும் தரும சிந்தையை எங்களுக்கு ஈவாய் இறைவா எனப் பிரார்த்திக்கின்றேன். (க)

## "5000 ரூபா தருவதாக சொன்னார்"

(டலோவி)

அந்தோனிப்பிள்ளை என்பவர் என்னிடம் வந்து விளக்கமறியலில் 1ம் எதிரியை சந்திப்பதற்காக வரும்படியும் 1ம் எதிரியிடம் ஏதோ கதைக்க வேண்டுமென்றும் 1ம் எதிரிக்கு வழக்குச் செலவாக 5000ரூபா தருவதாகவும் சொன்னார். ஆனால் நான் அவற்றிற்கு சம்மதிக்கவில்லை.

பொலிகண்டி ரியூட்டரி மாணவி கமலம் கொலை வழக்கில் சாட்சியமளித்த 1ம் எதிரியின் மாமனாரான சிங்கராசா அந்தோனிடபிள்ளைமேற்கண்டவாறு கூறினார்.

இவ்வழக்கு பருத்தித்துறை நீதிமன்றத்தில் நீதவான் கே. எஸ். மகேசன் முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டது.

(விசாரணைமுழுவிபரம் சனிக்கிழமை ஈழநாடு இதழில் வெளிவரும்)

## மக்கள் கருத்து

### இப்படியும் ஒரு ஏமாற்றம்

நல்லூர் வட்டாரத்தில் நாலு வயதுக்குட்பட்ட மிக ஆரோக்கியமான குழந்தைக்கான முதலாம் இடம் எனது பேரன் ஆனந்தனுக்குக் கிடைத்தது. சோதனை செய்தவர்கள் ஏகமனதாக இவனை முதலாம் பிள்ளையாகத் தெரிவு செய்தார்கள் இதற்கான பரிசைப்பெற (2-11-80) பி. ப. 6 30 மணிக்கு யாழ்ப்பாணம் திறந்த வெளிஅரங்கிற்கு வரும்படி இவனை அழைத்திருந்தார்கள். மிக மகிழ்ச்சியோடு எனது குடும்பத்தார் இப்பிள்ளையையும் கூட்டிக்கொண்டு பி. ப. 6 மணிக்கெல்லாம் அங்கு சென்று ஆவலோடு காத்திருந்தார்கள். பி. ப. 8 மணியளவில் திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் பரிசில்களை வழங்கினார் இந்தப் பிள்ளையினுடைய பெயர் கடைசி வரை கூப்பிடப்படவில்லை. பரிசில்கள் வழங்குவதை ஒழுங்கு செய்தவர்களுடைய பிள்ளைகளுக்கும் இம்மாதிரியான தொரு ஏமாற்றம் சிகழ்ந்தால் தான் அந்த மனவேதனையை அவர்களும் உண்மையாக உணரமுடியும்.

சி. சு. நடராஜன்,
... வீதி,
யாழ்ப்பாணம்.

அனைவர்க்கும் இத்திக்கும்
தீபாவளி வாழ்த்துக்கள்!

★ அபிஷேகச் சாமான்கள்
★ அத்திபாரச் சாமான்கள்
★ விவாக முகூர்த்தப் பொருட்கள்
மற்றும்
கோவில் தேவைகளுக்கான
சகல மருந்துச் சாமான்களும்
மலிவான விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

க. செ. கைலாசம்பிள்ளை அன் சன்ஸ்
(மருந்துச்சரக்கு வியாபாரம்)
76, பெரியகடை, (போன்: 7135) யாழ்ப்பாணம்.

தீபாவளி வாழ்த்துக்கள்!
கல்யாண வைபவங்களுக்கேற்ற
0 கூறைச் சேலைகள்
0 பட்டு வேட்டிகள்
நவநாகரீக ஜவுளிகளுக்கு இன்றே விஜயம் செய்யுங்கள்!

க. நாகமுத்து அன் சன்
48, 50, பெரியகடை ... யாழ்ப்பாணம்
போன்; 7475
ஃ அழகிய சேட் வகைகள் ஃ பெல்பொட்டம்
ஃசிறுவர் ஆடைகளுக்கும்
சிறந்த ஸ்தாபனம்! மீண்டும் வருக நன்றி

வாடிக்கையாளர்கள், அன்பர்கள், நண்பர்கள்
அனைவருக்கும் அன்புகலந்த
தீபாவளி வாழ்த்துக்கள்!

ராஜு ஸ்ரோர்ஸ்

இறக்குமதி செய்யப்பட்ட
பால்மா வகைகள், நூதன விளையாட்டுச் சாமான்கள்,
கோப்பை, பீங்கான், கிளாஸ், எனுமல்,
அலுமினியம், எவர் சில்வர் சாமான்களும்
நெற்குற்றும் மாவு அரைக்கும்
இயந்திரங்கள் அதன் உபஉறுப்புகள்
சுவர் மணிக்கூடு, கைக்கடிகாரங்கள்
மின்சார மோட்டோர்கள், மின்சார விசிறிகள்
மின்சார உபகரணங்கள்
மற்றும் சில்லறைச் சாமான்களுக்கும்
சுவைமிக்க பேபி மார்க் குளிர்பானங்களுக்கும்

இன்றே விஜயம் செய்யுங்கள்!

67, 69, கஸ்தூரியார் வீதி
யாழ்ப்பாணம்.
போன்: 372 தந்தி: ராஜு

எமது வாடிக்கையாளர்கள் அனைவருக்கும்
எமது தீபாவளி வாழ்த்துக்கள்!

கேக் தயாரிப்பதற்குரிய
குளோப் பட்டர், அஸ்ராமாஜரின்
ஜிஞ்ஜர், பிறிசேவ், ஜெளஜெள, பம்கிங்,
கண்டிப்பீல், ஸ்ரோபெறி ஜாம், கோல்டன்சிறப்
செறிஸ், கறன்ஸ், றேசன்ஸ், பிளம்ஸ்; கஜு,
எசென்ஸ் வகைகள், ஐசிங்சுகர், மாச்சினி
ஆகியவையும், இறக்குமதி செய்யப்பட்ட
பிஸ்கட், அப்பிள், சீஸ்வகைகள், பாண் தயாரிக்கும்
ஈஸ்ட், கைகோ, பீகாவ் மாஜரின், லிவர் பவுடர்,
குளிர்பானம் தயாரிக்கும் பொருட்கள்,
வீட்டுப் பாவனைப் பொருட்கள், ஆகியவற்றை
நிதான விலையில் பெற்றுக்கொள்ள

சிறந்த ஸ்தாபனம்

ஸ்ரீசாயிஸ்ரோர்ஸ்

141, நவீன சந்தை (இரண்டாம் கட்டிடம்)
ஆஸ்பத்திரி வீதி ... யாழ்ப்பாணம்.
போன்: 660

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாளை வெள்ளிக்கிழமை கேதாரகௌரி நோன்புநிறைவு பெறுகிறது.

# கன்னியர் வாழ்வு மலர

# கௌரி விரதம்

இறைவன் திருக்கோலங்களில் ஒன்று அர்த்த நாரீஸ்வரர் வடிவம் அம்மையப்பனை ஒன்றுக் காணுங்காட்சி ஒன்றேயென்றதத்துவமும் கூட மாது ஒருபாகன் என்பது அர்த்தம். ஒரேவடிவில் பாதி பெண் பாதி ஆண் இயற்கையுமப்படித்தானமைந்திருகிறது, நாமவற்றைவேருகப் பார்க்கிருேம். ஒரேமலரில் ஆண் பெண் பகுதிகளைக் காணலாம் உயிரினங்களின் சேர்க்கையால் வரும் சந்ததிகள் தாய்தந்தையரின் அம்சங்கள் பொருந்தின. சமுதாயத்தைப் பொதுமட்டமாக வைத்துவிருப் பார்த்தால் பாதி ஆண்; பாதி பெண். உயிரும் உடம்பும் சேர்ந்தது வாழ்வு. உயிரெழுத்தும் மெய்யெழுத்தும் பேர்வதால் வந்தது உயிர் மெய்யெழுத்துக்கள். உயிர் சிவம் என்றுல் மெய்சக்தி. உயிர்மெய் சிவசக்தி வடிவம். உயிர்த்தத்துவம் சிவம்; உடல் தத்துவம் சக்தி. மாதொரு பாகனுய் அர்த்த நாரீசுவரனுய் இருக்கும் தத்துவம் எல்லாம் சிவசக்தி மயமேபென்பதைக் காட்டுகிறது. கோவில்களிலே இருக்கும் சிவலிங்கம் கூட ஆவுடையாள் என்னும் பீடம் சக்தியினடையாளம் லிங்கம் சிவசின்னம். இந்த இரண்டின் இணைப்பால் அனைத்துமே தோற்றுகின்றன. சக்தியின்றிச்சிவமில்லை. சிவமின்றிச் சக்தியில்லை. இந்தத்தத்துவத்தின் உட்பொருளை விளக்கும் விரதம் கேதார கௌரி விரதம்.

அன்னை பராசக்தி இறைவனை உபாசித்து பாதித்திருவுருப்பெற்ற ஸ்தலம் திருக்கேதாரம். தேவர்கள் ஆறுமாதமும் மனிதர்கள் ஆறுமாதமும் வழிபாடியற்றுவர் இத்தலத்தில் உலகமாதா தவஞ்செய்வது மனிதர்க்கோர் படிப்பினையன்றே. பரமாத்மாவாகிய இறைவனைச் ஜீவாத்மா அடைவதற்கே அன்னை தவமியற்றினுள். ஒருவனுமொருத்தியுமிசைந்து வாழ்வது போலவே ஒவ்வொரு ஆன்மாவும் ஆன்ம நாயகனை அடையவேண்டும். கன்னிப் பெண்கள் தகுதியான தலைவனைப் பெறவும் பெற்ற மாங்கல்யம் மங்கலமாக விளங்கவும் வேண்டி இவ்விரதம் அனுஷ்டிக்கப்படுகிறது.

இப்புனித விரதம் இந்துக்க

(11-ம் பக்கம் பார்க்க)

## உமயவளே! இமயவளே! அடிகள் போற்றி!!

செங்கதிரெழ முன்னெழுந்து இருபத்தோர்நாள்
புனலாடி நினதடிகள் மனத்திருத்தி
மங்களமார் பசும்மஞ்சள் கொண்டுநின்னை
அர்ச்சிக்கும் மங்கையர்க்கு வரமளிப்பாய்,
தங்குமெழில் குங்குமத்தால் உமையே! நின்னைப்
பூசிக்கும் மாதரார்க்கு வாழ்வளிப்பாய்!
பொங்குநறும் சந்தனத்தின் குழம்புகொண்டு
அபிஷேகிக்கும் கன்னியர்க்குந் துணையளிப்பாய்!!

★

திங்களென வொளிர்கிறநின் திருமுகத்தைக்
கண்குளிரக் காண்பவர்க்கு அச்சமுண்டோ?
சங்கரனின் இடப்பாகத் தமரும்நின்னைப்
பண்ணிசையாற் பணிபவர்க்குக் குறையேயில்லை!
செங்குவளை மலர்விழிகள் பொழியும்கருணைப்
பேரொளியிற் திளைப்பவர்க்கும் மருட்சியில்லை!
செங்கமலத் தாழிணைகள் பணிகுவோர்க்குப்
பங்கமிலா வாழ்வுதனை அருள்வாய்கௌரி!!

★

மாதவத்தன் மலையரசன் திருமகளாக
அவதரித்த மலைமகளே அடிகள்போற்றி!
மாதவனும் மாயவனின் உடன்பிறப்பாய்
அவதரித்த உமையவளே அடிகள்போற்றி!!
மாதவத்தர் மறைவல்லார் அறியவொண்ணு
மறைமுதல்வன் துணையவளே அடிகள்போற்றி!
மாதரெலாம் நல்வாழ்வு வேண்டிநோற்ருர்!
மனம்போல வாழ்வளிப்பாய் போற்றிபோற்றி!!

—முருகு

வாடிக்கையாளர்கள், அன்பர்கள், நண்பர்கள்
அனைவருக்கும் தித்திக்கும்

**தீபாவளி நல்வாழ்த்துக்கள்!**

இத்திருநாளில் உங்கள் இதயம் கவர்ந்த
தங்க, வைர, நகைகளைத்
தெரிவுசெய்ய மறவாதீர்கள்.

**பொ. அம்பலவாணர்**

**தங்க, வைர, நகை வியாபாரம்**

119, கஸ்தூரியார் வீதி - யாழ்ப்பாணம்.

போன்: 7199 தந்தி: 'வைரம்'

அனைவருக்கும் அன்புகலந்த

**தீபாவளி வாழ்த்துக்கள்!**

அழகிய பவுண் நகைகள்,
தங்கப்பவுண், வைரங்கள்
ஆகியவற்றுக்கு

**கே. என். எம்.**

**மீருன் சாஹிப்**

தங்கப்பவுண் நகை மாளிகை
கன்னுதிட்டி, (போன்: 585) யாழ்ப்பாணம்.




அன்பர்கள் ஆதரவாளர்கள் அனைவருக்கும்
உளங்கனிந்த

**தீபாவளி வாழ்த்துக்கள்**

உரித்தாகுக

உங்கள் அபிமானத்துக்குரிய மில்க் வைற் நீலசோப், பார்சோப், சலவைப்பவுடர் நீம் வாசனை சோப் மெடிக்கேட்டற் சோப், ஒலிவ் ஸ்நானப் பவுடர், நீம் சுகாதார தூபம் ஆகியவற்றை வாங்கி உபயோகியுங்கள். மேலுறைகளை அனுப்பி பெறுமதி வாய்ந்த பரிசுகளைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

வியாபாரிகளுக்கு விசேட பரிசு:-

72 மில்க்வைற் நீலசோப் சுற்றிவரும் ரூப்பர் தாள் 50 அல்லது 33 மில்க்வைற் நீலசோப் சுற்றிவரும் ரூப்பர் தாள் 100 அல்லது மில்க்வைற் 60 சதம் அரைக்கட்டி சோப் சுற்றிவரும் ரூப்பர் தாள் 50 அனுப்பி அழகிய துவாய் ஒன்றைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

**மில்க்வைற் - யாழ்ப்பாணம்**

விளக்கு ஏற்றிட மகிழ்ச்சி மேலிட வந்தது தீபாவளி........................ எமது வாடிக்கையாளர்கள், நண்பர்கள், அன்பர்கள் அனைவருக்கும் உளம்கனிந்த தீபாவளி நல்வாழ்த்துக்கள்........... அன்பளிப்புப் பொருட்கள், இறக்குமதி செய்யப்பட்ட சகலவிதமான உணவுப் பொருட்கள், பாலுணவு வகைகள், அலங்கார இனிப்புவகைகளுக்கும் நற்பெயர் பெற்ற ஸ்தாபனம்.

**பெற்ரு டிஸ்ரிபியூட்டர்ஸ்**

61. மின்சாரநிலைய வீதி,
யாழ்ப்பாணம். போன்: 8278

(பெனின்சுலா குறூப் நிறுவனம். PENI SULA GROUP OF COMPANIES)

கிளை: 138, ஆட்டுப்பட்டித்தெரு, கொழும்பு - 13. போன்: 33064

துன்பம் அகன்று இன்பமும் ஒளியும் தரும் தீபாவளித் திருநாளில் அனைவருக்கும் எமது வாழ்த்துக்கள்.....
வர்ணப்புகைப்படங்களுக்கு கைராசியான ஸ்தாபனம்

**பாரத் ஸ்ருடியோ**

82/1, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம். Phone: 252

புகைப்பட சாதனங்களுக்கும் அலங்கார பொருட்களுக்கும்

**பாரத் சென்ரர்**

HELLO: 8265

178, நவீனசந்தை,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



ஒளியாகி
ஒலியுமாகி
எங்கும்
இன்பம் பரவிட
தீபாவளி
நல்வாழ்த்துக்கள்!

✯ எஸ். சின்னத்துரை அன் பிறதர்ஸ்,
✯ எஸ். சின்னத்துரை அன் கம்பனி,
✯ கல்கி சன்ஸ் ... யாழ்ப்பாணம்.

குழந்தைகளுக்குக் குதூகலம். குடும்பத் தலைவனுக்குக் கவலை, இளம் தம்பதிகளுக்கு உற்சாகம். இவ்வளவையும் ஏற்படுத்தும் தீபாவளிப் பண்டிகை—ஆண்டுதோறும்கொண்டாடப்பட்டுவருகிறது,

நரகாசுரன் சம்ஹாரம் செய்யப்பட்டுவிட்டதைக் கண்ட அவன் தாய்க்குத் துக்கம் மேலிட்டது. "என் பிள்ளை போன துக்கம் எனக்கிருந்தாலும் உலகிலுள்ளவர்களுக்கு எதுவித துக்கமும் இருக்கக்கூடாதென்று அன்று எல்லோரும் மங்களஸ்நானம் செய்து புத்தாடை உடுத்தி விருந்துண்டு சந்தோஷமாக இருக்க வேண்டும்' என்று வேண்டிக் கொண்டதாக ஒரு கதை உண்டு. இத்தகைய தியாக உணர்ச்சி காட்டப்பட்டது காரணமாகவே இப்பண்டிகைக்குத் தனிச்சிறப்பு ஏற்பட்டதுஎன்றுகூடச் சொல்லலாம்.

"நாம் துன்பப்பட்டாலும் உலகம் சேமமாக இருக்க வேண்டும்" என்ற மனப்பான்மையை வளர்த்துக்கொள்வது தான் இந்தத் தீபாவளியைக் கொண்டாடுவதன்பலனென்று காஞ்சி காமகோடி ஆச்சார்ய சுவாமிகள் சொல்லியிருக்கிறார்கள்.

## வடநாட்டில் புதுவருடம்

சந்திரகுப்த விக்கிரமாதித்தன் தர்மத்தை நிலைநிறுத்தும் பொருட்டு ஐப்பசிமாதம் அமாவாசை அன்று இரத்தின சிம்மாசனம் ஏறியதாக சரித்திர ஆராய்ச்சியாளர்கள் கூறுகிறார்கள். அன்றுமுதல்தான் விக்கிரம சகாப்தம் ஆரம்பமானதாகக் கூறப்படுகின்றது. இதனால்தானோ என்னவோ வடநாட்டில் தீபாவளியைப் புது வருஷப்பிறப்பாகக் கொண்டாடுகிறார்கள். இந்தப் புண்ணியதினத்தில் தான் ஸ்ரீராமர் அயோத்திக்குத் திரு... பட்டாபிஷேகம் கொண்டார் என்று... லப்படுகின்றது.

நரக சதுர்த்திய...

# தொல்காப்பிய...
# வாய்ந்தகுதுக...

## வெண்சங்கே முழங்...

வி. க. வி.

தெய்வீகத்தை ஏளனிக்கும் தீய புரளிகளைப்
பையப் பரப்புமதப் பாசாங்குப்-பொய்யர்கள்
மங்குசனி ஆரம்பம் ஆகிவிட்ட தென்றேவெ...
சங்கேநீ இங்கு முழங்கு!

மாமரச் சோலைநிழல் சூரன் மறைவதெனத்
தாழுவக்கும் கீழ்மையெலாம் தந்துவிட்டு-சா...
வீசித் திருவாசி தாங்கிவரும் வீணர்களின்
மோசத்தை நீயே முழங்கு!

வாணி விழாவில் வருங்கால ஐன்ஸ்ரீன்கள்
கோணிக் குருவிக் குறைப்படுதல்-காணுங்கா...
மந்தைகளை மாற்றுருவில் செய்துவிட்ட தெய்...
சிந்தையிலே ஏதோ சிதைவு?

வண்ணங்கள் வேறாகும் வாசனைகள் வேறுதா...
கண்ணிற் படும்மனித மொட்டெல்வாம்-மண்...
ஒன்றாய் மலரட்டும்! மானுடத்தின் நேசிப்பே...
நன்றாகும் என்றே நவில்!

தெய்வம்என்ன பாபம் புரிந்ததோ நாமறியே...
பொய்யர்களால் மாசுண்டு போவதற்கு—ஐய...
தெய்வத் திருவிளக்கும் தேசிழக்கச் செய்பவர்...
உய்வரோ நைவரோ சொல்.

வாடிக்கையாளர்கள், அன்பர்கள், நண்பர்கள் அனைவருக்கும் தித்திக்கும்
தீபாவளி நல்வாழ்த்துக்கள்!
இலங்கையில் முதன்முறையாக!
பிரபல்யம்மிக்க சைக்கிள் ஹீரோ
7 ஒரிஜினல் உதிரிப்பாகங்கள் சகிதம் கிடைக்கின்றது!!
(குரோமியம் கொபா கரியர், ஸைட் ஸ்ரான்ட், பெல், லொக், பம்பு, டூல், டூல்பேக், மூழு செயின் கவர்)
✯ விலை ரூபா 875|- முதல்1400|- வரை



தரத்தில் அதிசிறந்த உருக்கினால் ஆக்கப்பட்ட
100 °/. ஒறிஜினல் ஜப்பான் சைக்கிள்
லண்டனெக்ஸ்
மீண்டும் வந்துள்ளது
துணை விநியோகஸ்தர்களுக்கு விசேஷ சலுகை
மொத்த சில்லறைக் கொள்வனவுகளுக்கு தொடர்புகொள்க:
சிற்றி சைக்கிள் ஹவுஸ்,
77-டாம், விதி, கொழும்பு 12.
போன்: 35761—37971

உங்களது செல்வச் செழுமை...
அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவரு...
எளில் குன்றாத எடுப்பான இருபத்திரெண்டு கரட் ...
பிறிலியன்ற் ஜு...

அன்பர்கள் நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கு...
வலிவு, சக்தி, உற்சாகமூட்டும் சைவ உணவுவகை...
✯ அப்பளம் ✯ ஊறுகாய் ✯ மோர்...
ஸ்ரீதாமோதர விலாஸ்
239, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
போன்: 7065

வாழ்த்தொன்று சொல்லுவே...
கல்யாணி கிறீம் ஹவுஸ் ஸ்தாபனத்தா...
தீபாவளி நல்வா...
உங்களையும் உங்கள் விருந்தினர்களையும் மயக்கும்,
கட்லெட், மட்டன் றோல், கேக், சுவையான கோப்...
குறைந்த செலவில் திருகோணமலைக்கும், யாழ்ப்பாணத்திற்கும...
கல்யாணி கிறீ...
73, கஸ்தூரியார் வீதி
போன்: 80...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...பியப் பெருமை ...துகல திருநாள்

...த்திக்குத் திரும்பி வந்து ...பிஷேகம் செய்து ...டார் என்றும் சொல் ...கின்றது.

...சதுர்த்தியன்று லக்ஷ்மி

